புதிய அவையம்

**PUTHIYA AVAIYAM**
(PEER – REVIEWED JOURNAL)
**ISSN :2456-821X**
**Vol. 08, Issue 02, January 2025**

==================================================================

# நாட்டுப்புறப்பாடல்களும் மக்கள் வாழ்வியலும்

==================================================================

**முனைவர்ந. சோழன்**,
உதவிப்பேராசிரியர்மற்றும்நெறியாளர்,
தமிழ்முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூயநெஞ்சக்கல்லூரி( தன்னாட்சி),
திருப்பத்தூர் மாவட்டம்.635601.

**சே. இராஜேஸ்வரி**,
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தூயநெஞ்சக்கல்லூரி(தன்னாட்சி),
திருப்பத்தூர் மாவட்டம்.635601.

==================================================================

**ஆய்வுச்சுருக்கம்:**

ஆய்வுச்சுருக்கம்நாட்டுப்புறஇலக்கியமானதுமக்களோடுஇரண்டறக்கலந்துஉள்ள வைதங்களின்வாழ்வியல்அவைசார்ந்ததொழில்கள்கலைகள்பக்திமுதல்இவற்றைவெளிப்படுத்துவதாகநாட்டுப்புறபாடல்கள்அமைந்துள்ளன.இவ்வகைபாடல்கள்நாட்டுப்புறமக்களின்வாழ்வியலைவெளிப்படுத்தும்வாயில்களாகவும்அமைந்துள்ளன.இத்தகையநாட்டுப்புறப்பாடல்களைபல்வேறுவகையாகபிரிக்கலாம்.தாலாட்டுபாடல்கள்குழந்தைபாடல்கள்காத

ல்பாடல்கள்தொழில்பாடல்கள்முதலியவற்றில்நாட்டுப்புறமக்கள்தங்கள்வாழ்க்கையில்ந டைபெறும்நிகழ்வுகளைஉள்ளவற்றைஉள்ளவரைவெளிப்படுத்திஉள்ளனர்அவற்றில்அவ ர்களின்வாழ்வில்அமைந்துள்ளவிதத்தைஇக்கட்டுரையானதுவிளக்கைஇருக்கின்றது.

**கலைச்சொற்கள்**

ஔவு, படியளந்தால், பரியங் கொண்டு மொகதி, சயனமோடி தாதிகள் இது போன்ற கலைச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**முன்னுரை:**

நாட்டுப்புறவியல்என்னும்களம் மிகப்பரந்து விரிந்தது.அவற்றில் எண்ணிலடங்காச்செய்திகள்பதிவுசெய்யப்பட்டுள்ளதன. நாட்டுப்புறமக்கள்தங்கள்வாழ்க்கையில்நேரடியாகஅனுபவித்தவற்றைப்பாடல்களில்பதிவு செய்துள்ளனர்.நாட்டுப்புறவியல்குறித்தஆய்வுகளும்எண்ணில்அடங்கா.அவற்றில்ஒருபிரி வாகப்பாடல்கள்குறித்தஆய்வுகள்உள்ளன.அத்தகையபாடல்களில்மக்களின்வாழ்வியல்எ ன்னநிலையில்இடம்பெற்றுள்ளனஎன்பதைஆராய்வதே இந்தக்கட்டுரையின்நோக்கமாகும்.

நாட்டுப்புறப்பாடல்கள்சமூகவாழ்க்கையின்எளிமையான,மற்றும்ஆழமானபகுதிகளை கொண்டுள்ளது.நாட்டுப்புறபாடல்களில்அன்றாடவாழ்க்கையில்நடைபெறும்சம்பவங்கள், இயற்கை, பண்பாடு, மற்றும்மக்களின்உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவைபெரும்பாலும்வாழும்மக்களின்மற்றும்அவர்களின்சமூகவியல்நிலையை,அவர்கள்எ வ்வாறுவாழ்வியல்கூறுகளை எவ்விதம்பாடல்களாகவெளிப்படுத்துகின்றனர் என்பதை இக்கட்டுரைஆராயமுற்படுகின்றது.

**தொல்காப்பியமும்நாட்டுப்புறப்பாடலும்:**

நாட்டுப்புறப்பாடல்கள்ஆயிரம்ஆயிரம்ஆண்டுகளுக்குமுன்பேமனிதன்பேசத்தொட ங்கியபோதே நாட்டுப்புறப்பாடல்களும்தோன்றத்தொடங்கிவிட்டன.தொடக்ககாலமனிதன்ஏடும்எழுத் தாணியும்கொண்டுகவிதைபுனைவதற்குமுன்பேநாட்டுப்புறப்பாடல்கள்தோன்றிவிட்டனஎ

ன்பதைத் தொலகாப்பியர்,நாட்டுப்புறஇலக்கியத்திற்குக் கூறும்வரையறையைகாண்போம்.

**“பாட்டுஉரைநூலேவாய்மொழி பிசியே**

**அங்கதம்முதுசொல்லோடுஅவ்வேழ் நிலத்தும்“தொல்.செய்.79**

என்பதன்வாயிலாகவெளிப்படுத்திநிற்கின்றார்.தொல்காப்பியம்நாட்டுப்புறப்பாடலுக்கு இலக்கணம்கூறுகிறது.

மக்கள்தங்கள்வாழ்க்கையில்அனுபவிக்கும்சுகதுக்கஉணர்வுகளைஉள்ளதுஉள்ளவரேதங்கள்பாடல்களில்பதிவுசெய்திருப்பார்.இந்தப்பாடல்கள்பலவகையாகஅமைந்திருக்கும்.தாலாட்டுப்பாடல்கள்,குழந்தைப்பாடல்கள்,காதல்பாடல்கள்,தொழில்பாடல்கள்நாட்டுப்புறப்பாடல்களைஇயற்கைபாடல்கள்எனலாம்.இயற்கைஅன்னைதன்னைமுகம்பார்க்கத் தேர்ந்தெடுத்ததெளிவானகண்ணாடிநாட்டுபுறப்பாடல்கள்டாக்டர்சக்திவேல்கூறுகிறார்.‘ஒருநாட்டு மக்களின் நாகரீகத்தை,பண்பாட்டை,பழக்கவழக்கங்களை,வரலாற்றை,நாட்டு நடப்பை உண்மையாண முறையில் படம் பிடித்துக்காட்டுவன “நாட்டுப்பாடல்நாடோடிப்பாடல்,நாட்டார்ப்பாடல்,வாய்மொழி ப்பாடல்பாமரர்பாடல்பரம்பரைபாடல்கிராமியபாடல்கல்லாதார்பாடல்மக்கள்பாடல்ஏட்டில்எழுதாகவிதைமழையருவிகாட்டுப்பூக்கள்வனமலர்காற்றிலேமிதந்தகவிதைஎன்றெல்லாம்நாட்டுப்புறப்பாடலைஅழைக்கின்றனர்.

## தாலாட்டுப்பாடல்களில்வாழ்வியல்

குழந்தைபிறந்துமுதன்முதலாகக்கேட்கும்பாடலாகத்தாலாட்டுப்பாடல்அமைகின்றது.இந்தத்தாலாட்டுபாடல்என்பதுதாய்மைஉணர்வின்வெளிப்பாடாகஅமைகிறது.இந்தத்தாலாட்டு இலக்கியம்குழந்தையைச்சமாதானப்படுத்தமட்டும்பாடப்படுவதுஇல்லைதாலாட்டுகின்ற தாயின்மனநிலைமுழுவதும்இதில்வெளிப்பட்டிருக்கும்.அந்ததாய்தன்பட்டபாடுகளைஎல்லாம்குழந்தைக்குப்புரிகிறதோஇல்லையோதன்தாலாட்டின்வழியாகவெளிக்காட்டிவிடுவாள்.பெண்ணிற்குப்பிறந்தவீட்டில்அனுபவித்தஇன்பமும்புகுந்தவீட்டில்படும்துன்பமும்தாலாட்டின்போதுகற்பனைகற்பனையாகவந்துகொண்டிருக்கும்.அத்தகையநினைவுகளைஎதுகைமோனைசுவையோடுதன்தாலாட்டில்வெளிப்படுத்திகின்றாள்.

தாலாட்டுப்பாடல்களில்தாய்மாமன்செய்யும்சீர்களையும்,தந்தைபெருமை,தாய்வீட்டுப்பெருமை,போன்றவற்றைப்பாடல்களின்வெளிப்படுத்திகின்றாள்.

‘**பட்டிணியாபோறமாமன்உனக்குபரியம்கொண்டுவருவானா**’

இதுதாய்மாமனைக்கேலிசெய்யும்பாடலாகஉள்ளது.

தாலாட்டுப்பாடல் மூலம் ஒருபெண்அத்தை ,மாமன், பாட்டிதாத்தா ,அக்கா, சித்தி, ஆகியஉறவினர்களைமறைமுகமாகஅறிமுகம்செய்துவைக்கிறாள்.

**எட்டாதகோயிலுக்குஎட்டிவிளக்கேற்றி**

**தூரத்துகோயிலுக்குதூண்டவிளக்கேற்றி**

**சோதிபரதேசிகளுக்குபூமாடமும்கட்டிவைத்து**

**நல்லதண்ணீர்கிணறுகளும்கட்டிவைத்து(**நாட்டுப்புறஇயல்ஆய்வு)

என்றுபிள்ளையைஇல்லைஎனபோகாதகோயில்எல்லாம்சென்றுபிரார்த்தனைகள்செய்தநிலையைபாடுகின்றாள்

**வேளாண்மைப்பாடல்களில் வாழ்வியல்:**

வேளாண்மை மற்றும்இயற்கைவழிபாடு என்பதுதமிழர்வாழ்வியல்பண்பாட்டின்முக்கியபகுதியாகும். தமிழர்வேளாண்மைஇயற்கையைமையமாகக்கொண்டும்அவர்களின்நம்பிக்கைகளையும் வாழ்க்கைமுறைகளையும் வெளிப்படுத்தும் விதத்தில்அமைந்துள்ளன. இயற்கைஎனும்பருவநிலைத்தேவைகளைபுரிந்துகொண்டு, அதற்கேற்பவாழும்மனப்பாங்கைமக்கள்நாட்டுப்புறபாடல்களின்மூலம்வெளிப்படுத்தியுள்ளனர்.மழைஇல்லைமழைவரவேண்டிசெய்யப்பட்ட வழிபாடுகள்நாட்டுப்புறப்பாடல்களில்முக்கியஇடத்தைப்பெற்றுள்ளன.

**ஒருநாள்பூசைசெஞ்சேன்**

**நாராயணாஒருஒளவுமழைபெய்யலையே**

**நாராயணாஒளவு மழை பேயாமநாராயணா**

**முளைச்சஒருபயிரும்காஞ்சுபோச்சுநாராயணா**

**மூணுநாளாபூசைசெஞ்சேன்நாராயணாஒரு**

**முத்துமழைபெய்யலையேநாராயணா**.(தமிழர்நாட்டுப்பாடல்கள்)

மழைக்காகபூசைசெய்யும்வழக்கமும்நாட்டுப்புறப்பாடல்களில்காணப்படுகிறது. சிலவேலைகளில்பலநாட்கள்பூசைசெய்தும்மழைபெய்யாதுபோய்விடும்அப்பொழுதுமன வேதனையோடுமக்கள்நாராயணனைநோக்கிக்கதறுவார்கள். நாராயணன்என்றசொல்லுக்குநீர்என்பதுபொருள் .அவர்கள்கண்ணீரைக்கண்டுநாராயணன்மனம்இரங்கிமழையைப்பொழிவான்என்றமக்களின்நம்பிக்கையை பாடலில் காணமுடிகிறது.

**காதல்பாடல்களில்வாழ்வியல்**

அகத்தின்அழகுமுகத்தில்தெரியும்என்பார்கள்அவ்வாறுஒருவனுடையமனதில்காதல்வந்துவிட்டால்அதுஎங்கேயாவதுவெளிப்பட்டுவிடும்மனிதஇனம்என்றுதோன்றியதோஅன்றேகாதலும்தோன்றியிருக்கவேண்டும்ஆகையால்தான்தமிழர்கள்காதலைக்கொண்டாடிமகிழ்ந்துள்ளனர்.மனிதன்பிறக்கும்போதேஉணர்வுதன்னோடுஇருப்பினும்பருவம்அடையும்போதுஅவ்வுணர்வுமலர்ந்துமணம்வீசுகிறது.அவ்உணர்வுகளைவெளிக்காட்டும்வடிகாலாககாதல்பாட்டுகள்உள்ளன.நாட்டுப்புறகாதல்பாடல்கள்பெரும்பாலும்தொழில்செய்யும்இடங்களில்பிறக்கக்கூடியவனாகஉள்ளன.காதல்பாடல்களின்கருப்பொருளானதுஉறவில்இன்பம்காண்பதும்பிரிவில்வேதனைஅடைவதும்என்பதாகஅமைகிறது.நாட்டுப்புறக்காதலும்ஒரேமாதிரிஇருந்தாலும்வெளிப்படுத்தும்நிலையில்வேறுபடுகிறது.

**ஆண்முத்துப்போல்பல்லழகி**

**முகங்கோணாசொல்லழகி - என்னைக்**

**கண்டாக்கசக்குதோடி**

**கருத்துஒண்ணுஆனபின்னே**

**பெண்கண்டால்கசக்காது**

**கருத்துள்ளஅத்தானே - நான்**

**ஊரார்நகைக்கஞ்சி**

**ஓடுகிறேன்வெகுதூரம்(நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம்)**

என்றுகாதலர்கள்பேசிக்கொள்கிறார்கள்.

எல்லாவற்றையும்துறந்துதாய்தந்தையரைமறந்துகாதலனின்அன்புமட்டுமேசிறந்துநிற்கும் நிலையையும்காண்கிறோம்.

**தொழில்பாடல்களில்வாழ்வியல்**

'வினையேஆடவர்க்குஉயிரே'

என்றும்செய்யும்தொழிலேதெய்வம்என்றும்உழைக்கும்மக்கள்நம்புகின்றனர் .பொதுவாகத்தொழில்புரியும்போதுபாடும்பாடல்களைத்தொழில்பாடல்கள்என்கிறோம். தொழிலின்சுமையும்உழைப்பின்களைப்பும்தெரியாமல்இருக்கப்பாடுகின்றனர்.காடுகழனிகளிலும்தோட்டவயல்களிலும்தொழில்செய்யும்இடங்களிலும்நிலத்தைஉழும்போதும்ஏற்றம்இறைக்கும்போதும்நாற்றுநடும்போதும்களைஎடுக்கும்போதும்கதிரஅறுக்கும்போதும்உழுதுண்டுவாழும்மக்கள்பாடுகின்றனர்.

**காசாப் படியளந்தால் கனத்தநேரஞ்செல்லு**

**மிண்ணுநெல்லாப்படியளந்தால்நீண்டநேரம்செல்லுமிண்ணு**

**அரிசியாப்படியளந்தால்ஆக்கநேரஞ்செல்லுமிண்ணு**

**சோறாப்படியலுக்கும்எங்களையாசாமியார்பண்ணையிது.**(நாட்டுப்புறப்பாடல்கள்திறனாய்வு)

பொதுவாகநிலக்கிழார்களைப்பொல்லாதவர்என்றும்உழவர்களைத்துன்புறுத்துபவர்கள்என்றும்சிலர்வர்ணிப்பர் .இப்பாடல்பண்ணையார் பெருமையைக்கூறுகிறது.

**திருமணப்பழக்கவழக்கங்களும்சடங்குகளும்:**

திருமணத்தில்மணமக்களைவாழ்த்துதல்என்றஒருசடங்குசிறப்புடையதாகும்இன்றைக்குப்பெரும்பாலும்பேச்சாகஅமைந்துவிட்டஅந்நிகழ்ச்சிகுறிப்பிட்டசிலகாலங்களுக்குமுன்பாட்டுப்பாடிவாழ்த்துவதாகஇருந்திருக்கின்றது.

பாட்டுப்பாடிவாழ்த்துதல்கோயம்புத்தூர்,திருநெல்வேலிபகுதிகளில்பெரும்வழக்கினைஉடையதாகஇருந்துவருகின்றது.திருமணத்திற்குமுன்நிகழ்தந்தபலசம்பவங்களும்இவ்வாழ்த்தில்கூறப்படும்மணப்பந்தல்வர்ணனை, மணமகன்,மணமகள்பெருமை, மனச்சடங்குமுறை

,ஆரத்திப்பாட்டு போன்ற வாழ்வியல் நிகழ்வுகள்நாட்டுப்புறப்பாடல்களில்இடம்பெறுகின்றது.

திருமணத்திற்குமுன்தாலிசெய்துகொண்டுமணமகன்வீட்டார்பெண்வீட்டிற்குவருவார்கள். அப்போதுமணமகன் வரவைஅவளுக்குஎடுத்துக்கூறும்விதமாக.

**வாராண்டி ,வாராண்டி**

**வரிசைகொண்டுவாராண்டி**

**பாக்கு எடுத்துக்கிட்டு**

**பரியங் கொண்டுவாராண்டி**

**புத்தம்புதுச்சேலை**

**பொன்னானசவிரிசெஞ்சு**

**தங்கத்தாலேதாலிபண்ணி**

**தடம் புடிச்சி வாராண்டி.**(தமிழர்நாட்டுப்பாடல்கள்)

பரியம்கட்டுதல்மணமகளுக்குத்தாலிகூறைப்புடைவைஎடுத்துக்கொடுப்பதுமணமகன்வீட்டாரின்இந்தப்பழக்கவழக்கங்களும்சடங்குமுறைகளும்மாறாமல்இன்றும்நாம்பின்பற்றிவருகிறோம்என்பதைஇப்பாடல்மூலம்அறியமுடிகிறது.

**ஒப்பாரிப்பாடல்களில்வாழ்வியல்**

இறந்தவர்களைநினைத்துஅவர்களின்உறவுக்காரர்கள்அவர்கள்மீதுபாடுவதுஒப்பாரிஉயர்ந்தவர்கள்இழப்பைஎண்ணிஇறந்தவர்களையும்தம்மையும்ஒப்பிட்டுப்பாடுவதும்ஒப்பாரியாகும்.'வாழ்வின்முன்னுரைதாலாட்டுஆனால்முடிவுரைஒப்பாரியாகும்.தாலாட்டுகலங்கரைவிளக்கமானால்ஒப்பாரிநினைவுச்சின்னம்'ஆகும்.தாலாட்டும்ஒப்பாரியும்பெண்குளத்தின்படைப்பாகும்.என்னும்டாக்டர்சுசக்திவேல்அவர்களின்கூற்றுஒப்பாரியின் பொதுத்தன்மையினைவிளக்கி நிற்கின்றது.

கனவுகள்மக்களுக்குவாழ்வில்பின்நிகழப்போவதைமுன்னர்உணர்த்துகின்றனஎன்றுநம்புகின்றனர்.மக்களுக்குநன்மையோதீமையோவருவதுகனவுமூலம்தெரிந்துவிடும்.மரப்பெட்டிஉடைதல்,ஏற்றிவைத்ததீபம்அணைதல்,தேங்காய்உடைதல்போலக்கனவுகண்டால்தீமைவிளையும்எனக்கருதுகின்றனர்.தங்களுக்குநிகழப்போவதைதெய்வமோஅல்லதுமு

ன்னோர்களின்ஆவியோகனவில்தோன்றிகூறுவதாகநம்புகின்றனர்பின்வரும்பாடலில்கெட்டகனவுகண்டதாகஒருபெண்ஒப்பாரிபாடுகிறாள்.

**முந்நூறுபாப்பாருமொகதிளடுத்ததாலி**

**நானூறுபாப்பாருநாணயமாளடுத்ததாலி**

**ஆயிரம்பாப்பாருஅழகாளடுத்ததாலி**

**முக்கோடிதேவர்எல்லாம்மொகதிளடுத்ததாலி**

**என்பொன்னானசிறுதாலிபூமியிலேவுழகண்டேன்.**

**என்தங்கானசிறுதாலிதவறிஉ ழ கண்டேன்**

**இதுஎன்னசயனமோடிஅடிஅடிதாதிகளே**

**என்மாலமசங்ககண்டேன்மல்லியப்பூவாடகண்டேன்**

**கூர மடியகண்டேன்என்கொண்டப்பூவாடகண்டேன்.**

**இதுஎன்னசயனமோடிஅடிஅடிதாதிகளே.**சின்னத்தாய்(ஆலங்காயம், களஆய்வுபாடல்)

பெண்களுக்குபூதாலி மாலை, கூறபுடவைஇவை எல்லாம்மங்களமானபொருட்களாகும். எல்லாம்கீழேவிழுவதாகவும்தன்னுடையகணவனுக்குபெரியஆபத்துவரப்போகின்றதுஇந்தக் கனவுப் பாடலின்மூலம்விளக்கிக் கொள்ள முடிகின்றது.

**முடிவுரை:**

நாட்டுப்புறப்பாடல்களின் வகைகள் பலவானாலும்பிரிந்துஅவையெல்லாம்மக்களின்வாழ்வியலைவெளிப்படுத்தும்நிலையிலேயேஅமைகின்றன.மக்களின்வாழ்க்கை நிலையினைஉள்ளவாறுஎடுத்துரைப்பதாகவும்அமைந்துள்ளனஎன்பது மறுக்கமுடியாதஉண்மை என்பதைக் களஆய்வுப் பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.நாட்டுப்புறப்பாடல்கள்என்பதுமக்கள்மனங்களில்உள்ளஉணர்வுகளைவெளிப்படுத்தும்ஒருகலையாகும். இவைஇயற்கை, சமூகவாழ்வு, பண்பாடு, உழைப்பு, காதல், துக்கம்,

மகிழ்ச்சிபோன்றவாழ்க்கையின்அனைத்துப்பரிமாணங்களையும்எடுத்துரைப்பதாக அமைகின்றன.

இதனால், இந்தப்பாடல்கள்வருங்காலசந்ததியினருக்கு எளிய மக்கள்உண்மை நிலையினைஉணர்த்தும்வகையில்ஒருசட்டகமாகவும்அமைகின்றன.

நாட்டுப்புறபாடல்கள்மக்களின்இயல்பானவாழ்வின்அழகையும்அவர்களதுஉறவுகளையும் வெளிப்படுத்தும்வாழ்வியல்களமாகத்திகழ்கின்றன. முடிவாக, நாட்டுப்புறப்பாடல்களில் வெளிப்படும்வாழ்வியல்கூறுகள்என்பதுஎளிமைமற்றும்உண்மையின்கூடியவாழ்க்கையின் வெளிப்பாடாகஅமைவதோடு,அவைசமூகத்தின்மூலதனமாகவும், பாரம்பரியத்தைப்பாதுகாக்கும்பெட்டகமாகவும் அமைகின்றமையினை உய்த்துணர முடிகின்றது.

**துணைநூல்பட்டியல்:**


1. சக்திவேல்.சு,முனைவர்நாட்டுப்புறஇயல்ஆய்வு. மணிவாசகர்பதிப்பகம்பாரிமுனைசென்னை-600108.
2. சுப்பிரமணியன். ச,தொல்காப்பியம்மூலமும்உரையும், நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்.2004.
3. வானமாமலை. நாதமிழர்நாட்டுப்பாடல்கள், நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ். 2006.
4. இராமநாதன். ஆறு,முனைவர்.நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம் தொகுதி. 1மெய்யப்பன் தமிழாய்வகம்.சிதம்பரம்.608001.
5. அழகப்பன். ஆறு, முனைவர்நாட்டுப்புறப்பாடல்கள்திறனாய்வு, பாரிநிறையும்சென்னை-600108.
6. நாட்டுப்புறப்பாடல்கள்காட்டும்தமிழர்வாழ்வியல்மணிவாசகர்பதிப்பகம்பாரிமுனை சென்னை-600108.